**தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கை - 2021**

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தின் செயற்பாடுகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரிமை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிச் சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்ககப்பட வேண்டிய 2021 ஆம் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரிமையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டின் சபையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 நவம்பர் 16 வரையில் 08 மாதங்கள் தாமதமாகியிருந்த போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 ஆம் வருடத்தின்போது சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிக்கூற்றுக்கள் குறிப்பிட்ட திகதியில் சமர்ப்பிக்கப்படுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணங்கள் 756,757 | 2021 திசெம்பர் 31 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 113,668,167 கிரயமான புத்தக இருப்புக்கள் மற்றும் தேசிய நூலகத்தின் பாதுகாப்பு புத்தக இருப்புக்கள் என்பன மீளாய்வாண்டிலும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக் கவில்லை. | புத்தகங்களின் சேகரிப்பு சிறிய தொகுப்புக்களாக காணப்படுகின்றமை மற்றும் தொடர்ந்தும் வாசகர் சேவையை வழங்க வேண்டியதாலும் வருடாந்தம் ஒரு தடவை மெய்மையாய்வு நடாத்தப்படாததுடன் 2023 ஆம் வருடத்திலிருந்து கட்டம் கட்டமாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படு வதற்கு உள்ளக திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 1647(ஆ) | சபைக்குச் சொந்தமான ரூபா 32,270,762 கிரயமான 07 வாகனங்கள் மற்றும் 02 நிதிக் குத்தகை வாகனங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாகவும் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்படு வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபைக் சட்டம் | | | |
| (i) 12(2) (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | (i) நூலகம் மற்றும் ஆவண | அனுமானிக்கப்பட்டு புதிய | நூலகம் மற்றும் ஆவண |

| | | |
|---|---|---|
| ஆதாரங்கள் மீதான தேசிய இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் 2015 ஆம் வருடத்தில் புதிய நூலகத் தகவல் முகாமைத்துவ அமைப்பிற்கு சேர்க்கும் போது 330,228 பொருட்கள் சேர்க்கப்படாதிருந்ததுடன் உள்ளடக்கப்பட்ட பொருட்களிலும் சில தவறான தரவுகள் காரணமாக வாசகர்களுக்கு இவ்வளங்களைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் தவறவிடப்பட்டிருந்தது. 2015 ஆம் வருடம் வரை பத்து இலட்சம் பொருட்கள் காணப்பட்டதாகக் கருதப்பட்டு தொடர் இலக்கம் ஒதுக்கப்பட்ட போதிலும் சமர்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 503,532 பொருட்கள் இருந்தன. இந்த அனுமானிப்புக் காரணமாக பயன்பாட்டுப் பதிவேட்டில் 496,468 ஆம் இலக்கங்களில் மிகை காணப்பட்டமை வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | கையகப்படுத்தல்கள் புதிய தரவு அமைப்பிற்கு சேர்க்கப்படுவதற்கு குறிப்பிட்ட தடை தாண்டலாக பத்து இலட்சம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. தரவு அமைப்பிற்கு உட்படுத்தப்படாத தரவுகளைச் சேர்ப்பதற்கு 2016, 2020, 2022 ஆம் வருடங்களில் முன்மொழியப்பட்டும் ஆனால் நிதிப்பற்றாக்குறை மற்றும் பதவியணிப் பிரச்சினைகள் காரணமாக அந்நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. தற்போது தற்காலிக பயிற்சியாளர் ஈடுபடுத்தப்பட்டு தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ஆதாரங்கள் முறையாக நிறுவப்பட்டு ஒழுங்காகவும் திறமையாகவும் பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ii) நூலக மற்றும் ஆவணமாக்கல் | அப் பிரிவுகளில் மாதாந்த முன்னேற்ற | சட்டத்தின் பிரகாரம் சபைக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வளங்கள் தொடர்பாக தேசிய தொகுப்பை வழங்குதல், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆவணப் பொருட்கள் தொகுப்பை நிறுவுதல், மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதலின் முன்னேற்றம் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு, மீட்டெடுப்பு மற்றும் நூலியல் கட்டுப்பாட்டுப் பிரிவுகளின் முன்னேற்ற அறிக்கைகளில் பிரதிபலிக்காததுடன் அப்பிரிவுகளில் முறையே 5,288,1,880 மற்றும் 33,353 அலகுகள் கையிருப்பில் காணப்பட்டன. | அறிக்கைகள் புதிய மாதிரியின் பிரகாரம் தயாரித்தல் 2022 செப்டெம்பர் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பிரிவுகளில் கையிருப்பின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் செயற்திறனாக நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 12(2)(எ) பிரிவு | தொகுப்புக்களை வெளியிடுவதற்கான காலப் பகுதி நிர்ணயிக்கப்படவில்லை என்பதுடன் 2019, 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் தாமதமாகிய தொகுப்புக்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் வருடத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் கொரோனா நிலைமை காரணமாக அதிகபட்ச 15 மாதங்கள் தாமதத்தில் இலங்கை தொகுப்புக்கள் வெளியிடப்பட்டிருந்தன. | சட்டத்தின் பிரகாரம் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் செயற்திறனாக நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1978 இன் திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 383,231,029 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்க வில்லை. | நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணி வருமாறு உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படுவதற் கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணககாய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருத்தங்களுக்காக அனுப்பப்பட்ட பாவனையிலிருந்து நீக்கப்பட்ட சேவைகள் தேவையற்ற அச்சியந்திரங்களுக்காக 2021 சனவரி 14 தொடக்கம் 2023 சனவரி 13 வரை சேவை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு ரூபா 49,680 செலுத்தப்பட்டிருந்தது. அச்சீட்டுப் பிரிவில் தற்போது பயன்படுத்தப்படுகின்ற, வருடமொன்றின் உத்தரவாதக் காலத்துடன் 2020 சனவரி 21 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,634,580 பெறுமதியான அச்சியந்திரம் 2020 செப்டெம்பர் 03 ஆந் திகதி சேவை செய்யப்பட்டதன் பின்னர், மறு சேவைக்காக சேவை ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை. கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒருமுறை மட்டுமே சேவை செய்யப்பட்டிருந்த அச்சியந்திரம் 2022 நவம்பர் | குறிப்பிட்ட அச்சியந்திரம் பயன்படுத்தக்கூடியவாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட இயந்திரத்தின் மூலம் நிறுவகத்தின் சிறிய அச்சீட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் சேவை ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. புதிய அச்சியந்திரத்தின் தேவையின் பிரகாரம் சேவைகள் செய்யப்பட்டிருந்தது. 26 மாத காலம் சேவை செய்யப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தமை தவறு. மேலதிக தகவல்கள் வழங்கப்படுவதற்குத் தேவையான குறிப்பிட்ட கோவைகள் அரச கணக்காய்வுப் பிரிவினால் எடுக்கப்பட்டுள்ளதால் கோவைகள் பரிசீலிக்கப்படாது பதில் அளிப்பதற்கு முடியாதிருந்தது. | பிரிவுகளுக்கிடையே சரியான ஒருங்கிணைப்பை உறுதி செய்வதற்காக உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமைகளை நிறுவுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | வரை 25 மாத காலங்களுக்கு சேவை செய்யப்படாது அச்சீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2014 ஆம் வருடத்திலிருந்து 2018 வருடம் வரை அச்சிடப்பட்ட ரூபா 2,011,363 பெறுமதியான 7,506 தொழிற்சங்க வெளியீடுகள் இருப்பொன்று 2022 நவம்பர் 24 வரையில் விநியோகிக்கப்படாது காணப்பட்டன.. | தொழிற்சங்க வெளியீடுகள் மிகுதி இருப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தொகுப்புக்கள் மற்றும் இலங்கை பருவ சஞ்சிகைகளின் நூலியல் மற்றும் வரிசைப்படுத்தல் பற்றிய பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் கற்றல் பொருட்களாக வெகுமதிகளை வழங்குவதற்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வருகை தருபவர்களுக்கு வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. | தேவையறிந்து அச்சிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கும் மற்றும் காணப்படுகின்ற புத்தகங்களை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

----------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான கட்டிடம் நவீனமயப்படுத்தல் 2018 சனவரி 24 ஆந் திகதி தொடக்கம் 09 மாத காலத்தில் முடிக்கப்படுவதற்கு ரூபா 211,937,795 ஆன வரி நீங்கலான ஒப்பந்தத் தொகைக்கு கல்வி அமைச்சு ஒப்பந்தக் கம்பனியுடன் உடன்படிக்கை செய்திருந்தது. 2020 ஆம் வருட இறுதியில் கம்பனிக்கு ரூபா 252,463,612 செலுத்தப்பட்டிருந்ததுடன் 03 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 மார்ச் மாதத்தில் ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. 2021 சனவரி 05 ஆந் திகதியின் 15-02-07 ஆம் இலக்க தலைவரின் கடிதத்தில் 18 பிரதான விடயங்கள் மற்றும் தரைத்தளத்திலிருந்து நான்காவது தளம் வரையிலான முழுமையற்ற மற்றும் திட்டமிட்டபடி முடிக்கப்படாத ஒப்பந்தப்பணி இனங்காணப்பட்ட போதிலும், 2022 நவம்பர் 09 ஆம் திகதி | முன்னாள் தலைவரினால் ஒப்பந்தக் கம்பனியின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு கடற்படைக்கு அப்பணியை ஒப்படைக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்ட வேலைப்பகுதி மற்றும் அதன் வேலை மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேவையான ஒதுக்கங்கள் பெறுவதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று | பெறுகை வழிக்காட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையில் அக்குறைபாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அக்காரணத்தினால் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு, மீட்டெடுப்பு, தொகுப்புக்களின் சுழற்சி மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவுகளின் நடவடிக்கைகள் 2018 ஆம் வருடத்திலிருந்து தற்காலிக இடங்களில் மேற்கொள்ளப்பட்டதால் அப்பிரிவுகளின் பங்களிப்பை சபையின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு போதுமான அளவில் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | சமர்பிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |

## 4. நல்லாளுகை

### 4.1 மனித வள முகாமைத்துவம்

| கணககாய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 197 மற்றும் சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளில் முறையே வெற்றிடங்கள் 04,08,33 மற்றும் 13 ஆக காணப்பட்டன. 2022 ஒக்டேர்பர் 31 வரை அந்நிலைமை முறையே 04,09,36 மற்றும் 16 ஆக திருத்தப்பட்டிருந்தது. | ஊழியர் பற்றாக்குறை காணப்பட்டதால் நிறுவனத்தின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வது கடினமாக இருந்தமையால் ஆட்சேர்ப்பிற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பதவிகளுக்காக தகுதியானவர்களை ஆட்சேர்பிப்பதற்குத் தேவையான அங்கீகாரம் திறைசேரி செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |